

திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சி, விஷ்வாஷ் மஹாலில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி வார்டுகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 725 தொகுப்புகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், வடக்கு ஒன்றிய செயலாளர் விஸ்வநாதன், நகர்மன்ற தலைவர் எஸ்.குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. கூட்டத்தில் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் குறித்து ஆலோசனைகளை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்புரையாற்றினார். இதில் முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, பாபநாசம் தொகுதி பார்வையாளர் ஆனந்த் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர்.

## 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த

# ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதுரை வடக்கு மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!



100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து வரும் 24ம் தேதி காலை 10.00 மணியளவில் மதுரை வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” கீழ்கானும் அட்டவனைப்படி ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :-

| வ.எண் | ஊராட்சி ஒன்றியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு | ஊராட்சி மன்றத் தலைவர், அலுவலகம், அருகில், ஒத்தக்கடை. |
| 2. | மேலூர் கிழக்கு,மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு, மேலூர் நகர், அ.வல்லாளபட்டி | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், மேலூர். |
| 3. | கொட்டாம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, கொட்டாம்பட்டி தெற்கு, | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், கொட்டாம்பட்டி. |
| 4. | அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு, | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், அலங்காநல்லூர். |
| 5. | வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி தெற்கு, | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில்,(திருவேடகம்) வாடிப்பட்டி. |
| 6. | மதுரை மேற்கு, மதுரை மேற்கு (வடமேற்கு – கோவில்பாப்பாகுடி), திருப்பரங்குன்றம் வடக்கு | சிக்கந்தர் சாவடி |

இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் அந்த அந்த பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் வெற்றியடைச் செய்திட வேண்டுகிறோம்.

**அமைச்சர் பி.மூர்த்தி,**
செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.




பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவில் கும்பகோணம் மாநகர கழக சார்பில் அலுவலக வாயிலில் அலங்கரிக்கப்பட்ட பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி தெட்சிணாமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் இரா.அசோக்குமார், மாநகர அவைத்தலைவர் எஸ்.வாசுதேவன், துணை செயலாளர்கள் பிரியம் ஜெ.சசிதரன், எஸ்.சிவானந்தம், செந்தாமரை, பொருளாளர் எஸ்.இரவிச்சந்திரன், மண்டல குழு தலைவர் மனோகரன், பகுதி செயலாளர்கள் செல்வராஜ், கல்யாணசுந்தரம், மாவட்ட சார்பணி அமைப்பாளர்கள் முருகன், அனந்தராமன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## அரியலூர் மாவட்டத்தில்

# மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

### அமைச்சர் சா,சி,சிவசங்கர் துவக்கி வைத்து, 491 நபர்களுக்கு பணியமர்வு ஆணைகளை வழங்கினார்!

அரியலூர், டிச. 22 –

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை மாதிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, 491 நபர்களுக்கு பணியமர்வு ஆணையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசால் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு இளைஞர்களுக்கு பணிவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதன் பயனாக மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் பணிவாய்ப்பினை பெற்று வருகின்றனர். அதன்தொடர்ச்சி யாக இன்றைய தினம் குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின் சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பணிநியமண ஆணைகளை வழங்கினார். இவ்வேலைவாய்ப்பு முகாமில் சுமார் 107க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்களும், தமிழ்நாடு அரசின் திட்டங்களை செயல்படுத்தும் தாட்கோ, மாவட்ட தொழில் மையம் மற்றும் திறன் பயிற்சி நிறுவ னங்கள் கலந்துகொண்டன. இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் சுமார் 2931 வேலைநாடுநர்கள் கலந்துகொண்டனர்.

மேலும், தற்போது வரையில் 491 நபர்கள் தனியார் நிறுவ னங்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பணியமர்வு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதுபோன்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை பயன்படுத்திக்கொண்டு வேலைவாய்ப்பினை பெற்று வாழ்க்கை யில் முன்னேற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து தனியார் துறை பணியமர்வு பெற்ற அருள்ராஜ் என்பவர் தெரிவிக்கையில், எனது சொந்த ஊர் வி.கைகாட்டி. செந்துறையில் தனியார் துறை வேலைவாய்;ப்பு முகாம்கள் நடத்தப்படுவதை விளம்பரங்கள் வாயிலாக அறிந்துகொண்டு இன்றைய தினம் வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்டேன். எனக்கு ஹோட்டல் மேனேஜ்மெண்ட் துறையில் பணி கிடைக்கப் பெற்றுள்ளது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நீண்ட நாட்களாக நல்லதொரு வேலை வாய்ப்புக்காக காத்திருந்த சூழலில் எனக்கு பணி வாய்ப்பு கிடை த்துள்ளது. இந்த வேலைவாய்ப்பின் காரணமாக எனது குடும்பத்தின் பொருளாதார முன்னே ற்றத்திற்கு என்னால் முடிந்த பங்களிப்பை அளிக்க முடியும். இந்த வேலை வாய்ப்பு முகாமினை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி என திரு.அருள்ராஜ் என்பவர் தெரிவித்தார்.

இதேபோன்று பச்சமுத்து என்பவர் தெரிவிக்கையில் நான் அரியலூர் மாவட்டத்தில் எனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறேன். பாலிடெக்னிக் கல்லூரியில் தொழில்நுட்ப கல்வி முடி த்துள்ளேன். எங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ள செந்துறை அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுவதை அறிந்து இன்றையதினம் வேலை வாய்ப்பு முகாமில் கலந்துகொண்டேன். தற்போது எனக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலை வாய்ப்பின் காரணமாக எனது வாழ்வதாரத்தை உயர்த்திக்கொள்வதுடன், எனது குடும்பத்தின் பொருளதார முன்னேற்றத்திற்கும் என்னால் முடிந்த பங்களிப்பை அளிக்க முடியும். இவ்வேலை வாய்ப்பு கிடைக்க ப்பெற்றுள்ளதால் எனக்கு மிகுந்த தன்னம்பிக்கையாக உள்ளது. எங்களைப் போன்ற கிராமபுறங்களில் உள்ள இளைஞர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாமினை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி என பச்சமுத்து என்பவர் தெரிவித்தார்.


இந்நிகழ்வில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதாதர இயக்கம் திட்ட இயக்குநர் சு.தேன்ராஜ், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்அ.கலைச்செல்வன், ஒன்றிய பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், பொன் .செல்வம், செந்துறை அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் எம்.ராமதாஸ், இதர அரசு அலுவலர்கள் மற்றும் இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகரம், வீரப்பன் சத்திரம் 24 வட்ட பாகம் எண் 106 கிழக்கு சட்டமன்றத் தொகுதி 98 ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் ஏற்பாட்டில் மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ப.மணிராசு, பொ.அன்பழகன், ஏ.மோகனசுந்தரம், பாகமுகவர், பாககுழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வை. இரத்தினவேலு
### டிசம்பர் 22 (2011)



அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கல்லூரிப் படிப்பு முடித்து வெளியே வந்தவுடன் புகளூர் கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றவர். பின்னர் கரூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இரயில் மறியல் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பெருந்தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.


2002ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

இவரது இறுதிக்காலம் வரை டி.என்.பி.எல். காகிதஆலை ஒப்பந்த தொ.மு.ச.வின் தலைவராக இருந்து தொழிலாளர் நலனுக்காகவும் போராடியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.டி. தணிகாசலம்
### டிசம்பர் 22 (2009)



குன்றத்தூரில் கழகம் வளரப் பாடுபட்ட செயல்வீரர்களில் இவரும் ஒருவர்.

1950ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு விதித்த 144 தடை உத்திரவை மீறி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க கூட்டம் நடத்தியதையொட்டி காவல்துறை இவரைக் கைது செய்தது.

கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்த்து போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**